சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – 2014–15–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பில் தொழிற்கல்வி பயிலும் 1000 ஏழை, எளிய மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில், ரூ.2.90 கோடி செலவில் 5 பிற்படுத்தப்பட்டோர், 3 மிகப்பிற்படுத்தப்பட்டோர், 1 சீர்மரபினர் மற்றும் 1 சிறுபான்மையினர் என மொத்தம் 10 தொழிற்கல்லூரி விடுதிகள் புதிதாக துவங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல [பிந1(2)]த் துறை

அரசாணை (நிலை) எண். 63 நாள்: 26.11.2015

6804

திருவள்ளுவர் ஆண்டு 2046
மன்மத – கார்த்திகை 10

படிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். பி4/ 4243/2014, நாள். 14.08.2014.

---

ஆணை:

2014–15 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பில் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

“தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியரின் நலனுக்காக மாநகரங்கள் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் 5 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 3 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள், 1 சீர்மரபினர் நல விடுதி மற்றும் 1 சிறுபான்மையினர் நல விடுதி என மொத்தம் 10 புதிய தொழிற்கல்லூரி விடுதிகள் 1000 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 2 கோடியே 81 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் துவங்கப்படும்”.

2. மேலே படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர்களின் நலனுக்காக மொத்தம் 1305 விடுதிகள் இயங்கி வருகின்றன என்றும், அவற்றில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 716 விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 576 விடுதிகளும், சிறுபான்மையினர் நல ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் 13 விடுதிகளும் இயங்கி வருகின்றன என்றும் தெரிவித்துள்ளார்.

3. புதிதாக துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 10 தொழிற்கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை துவக்கி செவ்வனே செயல்பட 100 மாணவ, மாணவியர் எண்ணிக்கை கொண்ட ஒவ்வொரு தொழிற்கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்ட பணியிடங்கள் மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300–34800 + ரூ.4600 தர ஊதியம் | 1 |
| 2. | சமையலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 2 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4800–10000 + ரூ.1300 தர ஊதியம் | 1 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/- தொகுப்பூதிய அடிப்படையில் | 1 |

4. மேலும், மேற்படி 10 தொழிற்கல்லூரி விடுதிகள் துவங்குவதற்கான தொடரும் செலவினம் ரூ.2,44,58,000/–ம் மற்றும் தொடரா செலவினமாக ரூ37,16,500/–ம் சேர்த்து மொத்தம் ரூ.2,81,74,500/– (இரண்டு கோடியே எண்பத்தொரு இலட்சத்து எழுபத்து நான்கு ஆயிரத்து ஐநூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறும், புதிதாக துவங்கப்படும் 10 விடுதிகளுக்கு ஒரு காப்பாளர் / காப்பாளினி, 2 சமையலர், ஒரு காவலர்/ ஏவலர், ஒரு துப்புரவு பணியாளர் வீதம் மொத்தம் 10 காப்பாளர்/ காப்பாளினி பணியிடங்கள், 20 சமையலர் பணியிடங்கள், 10 காவலர் / ஏவலர் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் காலமுறை ஊதியத்திலும், மேலும் 10 துப்புரவு பணியாளர் பணியிடங்களை தொகுப்பூதியத்திலும் தோற்றுவிக்கக் கோரியுள்ளார்.

5. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு, கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, 10 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல தொழிற்கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை (5 பிற்படுத்தப்பட்டோர், + 3 மிகப்பிற்படுத்தப்பட்டோர் + 1 சீர்மரபினர் + 1 சிறுபான்மையினர்) இணைப்பு I–ல் உள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள இடங்களில் புதிதாகத் துவங்கிடவும், இவ்விடுதிகளை துவக்குவதால் ஆண்டொன்றிற்கு தேவைப்படும் மொத்த செலவினத்தில் தொடர் செலவினம் ரூ.2,62,47,500/-ம் மற்றும் இணைப்பு II ல் குறிப்பிடப்பட்டுள்ள தொடரா செலவினம் ரூ.27,52,500/–ம் சேர்த்து மொத்தம் ரூ.2,90,00,000/- ஐ (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூறு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலும், புதிதாக துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ள 10 தொழிற்கல்லூரி விடுதிகளுக்கு ஒரு விடுதிக்கு தலா ஒரு காப்பாளர் / காப்பாளினி, 2 சமையலர்கள், ஒரு காவலர் மற்றும் ஏவலர் என 40 பணியிடங்களை தற்காலிக அடிப்படையில் காலமுறை ஊதியத்திலும், ஒரு விடுதிக்கு ஒரு துப்புரவு பணியாளர் என்ற முறையில் 10 பணியிடங்களை தொகுப்பூதிய அடிப்படையிலும் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

7. மேற்காணும் தற்காலிகப் பணியிடங்களில் பணியமர்த்தப்படும் பணியாளர்கள் அவர்கள் நியமனம் செய்யப்படும் நாள் முதல் சம்பளம் மற்றும் இதரப் படிகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விகிதம் | 10 தொழிற்கல்லூரி விடுதிகளுக்கு தேவைப்படும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | பி.எட். பட்டப்படிப்பு தகுதி பெற்ற காப்பாளர் / காப்பாளினி | ரூ.9300-34800 + ரூ.4600 தர ஊதியம் | 10 |
| 2. | சமையலர் | ரூ.4300-10000 + ரூ.1300 தர ஊதியம் | 20 |
| 3. | காவலர் மற்றும் ஏவலர் | ரூ.4300-10000 + ரூ.1300 தர ஊதியம் | 10 |
| 4. | துப்புரவு பணியாளர் | மாதம் ரூ.2000/- தொகுப்பூதிய அடிப்படையில் | 10 |
| | மொத்தம் | | 50 |

8. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் இணைப்பு III-இல் உள்ளவாறு பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) <u>பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகள் – 5</u>

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – I திட்டத்தில் சேராதது – AA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்".

(ii) <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதிகள் – 3</u>

"2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II - மாநில திட்டம் – KA – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்".

(iii) <u>சீர்மரபினர் நலக் கல்லூரி விடுதி – 1</u>

"2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது-101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – I திட்டத்தில் சேராதது – AF – சீர்மரபினர் மாணவரில்லங்களும், உணவு இல்லங்களும்".

(iv) <u>சிறுபான்மையினர் நல விடுதி – 1</u>

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள்".

9. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் "புது துணைப்பணி" குறித்த செலவினமாகும். நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை

அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு—செலவு பொது—I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவு செய்யத் தேவையான முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித் (வரவு செலவு பொது—I) துறைக்கு விண்ணப்பிக்கும்படி பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கூடுதல் செலவினம் குறித்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2015—2016—ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளில் சேர்த்திட ஏதுவாக விளக்கக் குறிப்பினை உரிய நேரத்தில் நிதித் (வரவு—செலவு பொது—I) / (பி.மி.பி.) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

10. இணைப்பு ஒன்றில் கண்டுள்ள 10 புதிய விடுதிகளும் முறையாக துவக்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் மற்றும் சிறுபான்மையினர் நல ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண். 65462/Finance(CMPC/PC)/2015, நாள். 26.11.2015—இன்படி பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கு கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1405 (ஆயிரத்து நானூற்று ஐந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர் (பொ).

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை — 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை — 5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை— 2.
மாநிலக் கணக்காயர், சென்னை — 18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர் (தணிக்கை— 1), சென்னை — 18 (பெயரில்).
மாநிலக் கணக்காயர் (தணிக்கை— 2), சென்னை — 18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை — 5.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல் :
நிதி (பி.மி.பி/ வ.செ.பொது1/ வ.செ. பொது2/மை.ம.ஆ.பி.) த்துறை, சென்னை — 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை —9.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
செயலரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை— 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் (பிந3/சிநஆபி) துறை, சென்னை —9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

இணைப்பு - I

அரசாணை (நிலை) எண். 63, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை, நாள். 26.11.2015– ன்படி 2014–15–ஆம் ஆண்டு துவங்கப்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் தொழிற்கல்லூரி விடுதிகளின் விபரம்

| வ.எண். | மாவட்டம் | தொழிற்பயிற்சி கல்லூரி விடுதி துவக்க உள்ள விடுதிகளின் விவரம் |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 1. | தஞ்சாவூர் | மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர். |
| 2. | சென்னை | மாணவர் விடுதி (அண்ணா பல்கலைக்கழகம்), கிண்டி. |
| 3. | திருச்சிராப்பள்ளி | மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி, திருச்சிராப்பள்ளி. |
| 4. | வேலூர் | பொறியியல் கல்லூரி மாணவர் விடுதி, வேலூர். |
| 5. | காஞ்சிபுரம் | பொறியியல் கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம். |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் | | |
| 6. | விழுப்புரம் | மருத்துவக் கல்லூரி மாணவியர்விடுதி, விழுப்புரம். |
| 7. | தருமபுரி | பொறியியல் கல்லூரி மாணவர் விடுதி, தருமபுரி. |
| 8. | சேலம் | மருத்துவக் கல்லூரி மாணவியர் விடுதி, சேலம். |
| சீர்மரபினர் நல விடுதி | | |
| 9. | தேனி | மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி, குன்னூர், தேனி. |
| சிறுபான்மையினர் நல விடுதி | | |
| 10. | இராமநாதபுரம் | பொறியியல் கல்லூரி மாணவியர் விடுதி, இராமநாதபுரம். |

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர் (பொ).

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

130
21
132
16
138

## இணைப்பு -- II

## தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு 10 தொழிற்கல்வி கல்லூரி விடுதிகள் துவங்குதல்

### பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள்— (5 மாணவர் விடுதிகள்)

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -- 277 கல்வி -- I திட்டத்தில் சேராதது – AA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள் | ஒரு ஆண்டுக்குரியது | |
| 01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-03-277-AA-0105) | 69,01,980 | ---- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>02 ஏனைய சில்லறை செலவினங்கள்<br>(DPC 2225-03-277-AA-0525) | 15,120 | |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-AA-0552) | | 1,50,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (5 X ரூ.20,000 X 12 மாதங்கள்)<br>(DPC 2225-03-277-AA-0614) | 12,00,000 | |
| 18 பராமரிப்பு<br>01 குறித்த கால பராமரிப்பு<br>(DPC 2225-03-277-AA-1819) | 75,000 | |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-03-277-AA-1917) | | |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-03-277-AA-2407) | | 9,88,750 |
| 34 ஏனைய செலவுகள்,<br>01 ஏனைய இனங்கள்<br>(DPC 2225-03—-277-AA-3415) | 3,86,250 | |
| 02--நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-AA-3424) | | 2,00,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-AA-6798) | 45,62,500 | |
| மொத்தம் | 1,31,40,850 | 13,38,750 |

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் (1 மாணவர், 2 மாணவியர் விடுதிகள்)</u>

2225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள் – II -, மாநில திட்டம் – KA – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள்.

| கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள் | ஒரு ஆண்டுக்குரியது | |
| 01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-03-277-KA-0105) | 41,24,268 | ---- |
| 05 அலுவலக செலவினங்கள்<br>02 ஏனைய சில்லறை செலவினங்கள்<br>(DPC 2225-03-277-KA-0525) | 9,072 | |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-KA-0552) | | 90,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (5 X ரூ.20,000 X 12 மாதங்கள்)<br>(DPC 2225-03-277-KA-0614) | 7,20,000 | |
| 18 பராமரிப்பு<br>01 குறித்த கால பராமரிப்பு<br>(DPC 2225-03-277-KA-1819) | 45,000 | |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-1917) | | 50,000 |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-03-277-KA-2407) | | 5,93,250 |
| 34 ஏனைய செலவுகள்,<br>01 ஏனைய இனங்கள்<br>(DPC 2225-03—277-KA-3415) | 2,31,750 | |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-KA-3424) | | 1,20,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-KA-6798) | 27,37,500 | |
| **மொத்தம்** | **78,67,590** | **8,53,250** |

9

சீர்மரபினர் நல விடுதி –(1 மாணவர் விடுதி)

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 80 – பொது–101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – I திட்டத்தில் சேராதது – AF – சீர்மரபினர் மாணவரில்லங்களும், உணவு இல்லங்களும்.

| கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள் | ஒரு ஆண்டுக்குரியது | |
| 01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-80-101-AF-0103) | 13,71,756 | ---- |
| 05 அலுவலக செலவினங்கள்.<br>02 ஏனைய சில்லறை செலவினங்கள்<br>(DPC 2225-80-101-AF-0523) | 3,024 | |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-80-101-AF-0550) | | 30,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (1 X ரூ.20,000 X 12 மாதங்கள்)<br>(DPC 2225-80-101-AF-0612) | 2,40,000 | |
| 18 பராமரிப்பு<br>01 குறித்த கால பராமரிப்பு<br>(DPC 2225-80-101-AF-1817) | 15,000 | |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-80-101-AF-1915) | | |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-80-101-AF-2405) | | 1,97,750 |
| 34 ஏனைய செலவுகள்,<br>01 ஏனைய இனங்கள்<br>(DPC 2225-80-101-AF-3413) | 77,250 | |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-80-101-AF-3422) | | 40,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-80-101-AF-6796) | 9,12,500 | |
| மொத்தம் | 26,19,530 | 2,67,750 |

சிறுபான்மையினர் நல விடுதி – (1 மாணவியர் விடுதி)

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்ட பணிகள் – II - மாநில திட்டம் – LA – சிறுபான்மையினர் மாணவரில்லங்கள்".

| கணக்குத் தலைப்பு செலவின விவரம் | தொடர் செலவினம் ரூ. | தொடரா செலவினம் ரூ. |
|---|---|---|
| 01 சம்பளங்கள் | ஒரு ஆண்டுக்குரியது | |
| 01 அடிப்படை சம்பளம்<br>(DPC 2225-03-277-LA-0104) | 13,71,756 | ------ |
| 05 அலுவலக செலவினங்கள்<br>02 ஏனைய சில்லறை செலவினங்கள்<br>(DPC 2225-03-277-LA-0524) | 3,024 | |
| 05 அலுவலக செலவினங்கள்<br>05 அறை கலன்கள்<br>(DPC 2225-03-277-LA-0551 | | 30,000 |
| 06 வாடகை கட்டண வீதங்கள் வரிகள்<br>01 வாடகை (1 X ரூ.20,000 X 12 மாதங்கள்)<br>(DPC 2225-03-277-LA-0613) | 2,40,000 | |
| 18 பராமரிப்பு<br>01 குறித்த கால பராமரிப்பு<br>(DPC 2225-03-277-LA-1818) | 15,000 | |
| 19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல்<br>(DPC 2225-03-277-LA-0104) | | 25,000 |
| 24 பொருட்களும், வழங்கலும்<br>(DPC 2225-03-277-LA-2406) | | 1,97,750 |
| 34 ஏனைய செலவுகள்,<br>01 ஏனைய இனங்கள்<br>(DPC 2225-03-277-LA-3414) | 77,250 | |
| 02–நூலகங்கள் முதலியவற்றிற்கு புத்தகங்கள் குறித்த கால வெளியீடுகள் வாங்குதல்<br>(DPC 2225-03-277-LA-3423) | | 40,000 |
| 67 உணவளிக்கும் உணவு செலவுகள்<br>09 ஏனையவை<br>(DPC 2225-03-277-LA-6797) | 9,12,500 | |
| மொத்தம் | 26,19,530 | 2,92,750 |

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர் (பொ).

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு—III

தொடரா செலவினத்தில் ஒவ்வொரு கல்லூரி விடுதிக்கும் கீழ்க்கண்டுள்ள இனங்களுக்கான அனுமதிக்கப்பட்ட செலவினம் பின்வருமாறு:

| வ. எண். | செலவினம் | அனுமதிக்கப்படும் தொகை ரூ. | |
|---|---|---|---|
| | | மாணவர் | மாணவியர் |
| 1. | எரிவாயு இணைப்பு | 30,000 | 30,000 |
| 2. | நூலக வசதி | 30,000 | 30,000 |
| 3. | பாத்திரங்கள் | 30,000 | 30,000 |
| 4. | மரச்சாமான்கள் | 30,000 | 30,000 |
| 5. | அரவை இயந்திரம் | 12,500 | 12,500 |
| 6. | குடிநீர் சுத்திகரிக்கும் கருவி | 11,000 | 11,000 |
| 7. | இன்வர்ட்டர் | 15,000 | 15,000 |
| 8. | விளையாட்டு கருவிகள் | 5,000 | 5,000 |
| 9. | பாய் (100 எண்ணிக்கை x ரூ.60) | 6,000 | 6,000 |
| 10. | பெட்ஷீட் (100 எண்ணிக்கை x ரூ.250) | 25,000 | 25,000 |
| 11. | பாடகுறிப்புப் புத்தகம் | 10,000 | 10,000 |
| 12. | தட்டு மற்றும் டம்ளர் (100 எண்ணிக்கை x ரூ.75) | 7,500 | 7,500 |
| 13. | முதலுதவி பெட்டி | 650 | 650 |
| 14. | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி | 6,000 | 6,000 |
| 15. | பூச்சி அழிப்பான் மின்கருவி | 5,100 | 5,100 |
| 16. | புத்தக அலமாரி | 10,000 | 10,000 |
| 17. | மின் அரைப்பான் | 6,000 | 6,000 |
| 18. | இட்லி வேகவைப்பான் | 8,000 | 8,000 |
| 19. | சுகாதார குட்டைதகளி (மாணவியர் விடுதிகளுக்கு மட்டும்) | ---- | 25,000 |
| 20. | தலையணை | 20,000 | 20,000 |
| | மொத்தம் | 2,67,750 | 2,92,750 |

7 மாணவர் விடுதிகளுக்கான தொடரா செலவினம் = ரூ.18,74,250/–

3 மாணவியர் விடுதிகளுக்கான தொடரா செலவினம் = ரூ.8, 78,250/–

மொத்தம் = ரூ.27,52,500/–

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர் (பொ).

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - IV

**ஒரு கல்லூரி விடுதி துவங்குவதற்கான சம்பளம் இல்லா இனத்தில் தொடர் செலவின விபரம்:**

| வ.எண். | பொருள் | எண்ணிக்கை | ஓர் ஆண்டிற்குரியது |
|---|---|---|---|
| 1. | உணவுக் கட்டணம் (அரசாணை (நிலை) எண். 52, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 09.07.2013) | 102 X ரூ.875 X 10 மாதங்கள் | ரூ.8,92,500/- |
| 2. | விடுதி வாடகை | ரூ.20,000 X 12 மாதங்கள் | ரூ.2,40,000/- |
| 3. | செய்தித்தாள் | ரூ.225 X 10 மாதங்கள் | ரூ.2,250/- |
| 4. | சோப்பு மற்றும் தேங்காய எண்ணெய் (பல்வகைச் செலவினம்) (அரசாணை (நிலை) எண். 7, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 18.01.2012) | 100 X ரூ.75 X 10 மாதங்கள் | ரூ.75,000/- |
| 5. | சிறப்பு உணவுக் கட்டணம் (அரசாணை (நிலை) எண். 54, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள். 09.07.2013) | 100 X ரூ.40 X 5 நாட்கள் | ரூ.20,000/- |
| | மொத்தம் | | ரூ.12,29,750/- |

**ஒரு கல்லூரி விடுதிக்கு ஓர் ஆண்டிற்கானச் செலவினம் = ரூ.12,29,750/-**

**10 கல்லூரி விடுதிகளுக்கு ஓர் ஆண்டிற்கானச் செலவினம் = ரூ.12,29,750X10**

**மொத்தம் = ரூ.1,22,97,500/-**

த. உதயச்சந்திரன்,
அரசு செயலாளர் (பொ).

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.